பாடம் 6

# நாகமானும் அழுக்கு ஆறும்

***உன் முழங்கையில் உனது ஆள்காட்டும் விரலினால் மெல்ல தேய்த்துப்பார். உன் முழங்கையைக் காட்டிலும் விரல்களில் அதிகமான நரம்புகள் உள்ளன. குளிர்ச்சி, சூடு, கடினம், மென்மை, வலி ஆகியவற்றைக் கண்டறிய தேவன் சிறப்பான நரம்புகளை நமக்குக் கொடுத்திருக்கிறார். ஆனால், தொழு நோயாளிகளால் இவ்வாறு கண்டறிய முடியாது. இங்கே தொழுநோயாளி ஒருவருக்கு என்னவாயிற்று என்று பார்ப்போமா?***

நாகமான் என்பவன் சீரிய நாட்டின் படைத்தலைவனாயிருந்தான். மிகச்சிறந்த வெற்றி வீரன் அவன்; எனவே, சீரிய நாட்டின் அரசனுக்கு நெருங்கிய நண்பனாயிருந்தான்.

ஒருநாள் அவனுக்குச் சுகமில்லாமல் போயிற்று. வரவர அவனுடைய வியாதி அதிகமாகியது. அவனது தோல் மிகவும் உலர்ந்து கடினமாகிப் பின்னர் அழுகிக் கீழேவிழ ஆரம்பித்தது. அவனது உடலில் உணர்ச்சிகள் குறைந்து கொண்டேவந்தன; இறுதியில், நாகமான் ஒரு தொழுநோயாளியானான்.

இஸ்ரவேல் நாட்டிலிருந்து நாகமானால் சிறைபிடிக்கப்பட்டு வந்த ஒரு சிறுபெண் நாகமானின் வீட்டில் வேலைக்காரியாக இருந்தாள். வீட்டிலிருந்து மிக தூரத்தில் அவள் இருந்தாலும் இஸ்ரவேல் நாட்டிற்கு, தேவன் செய்த நன்மைகளை அவள் மறந்துவிடவில்லை.

நாகமானின் மனைவியிடம் நாகமானை இஸ்ரவேல் நாட்டிற்கு அனுப்பினால், அங்கே இருக்கும் எலிசா தீர்க்கதரிசி நாகமானை சுகமாக்குவார் என்றும் சொன்னாள்.



**மனன வசனம்**

**அவருடைய பரிபூரணத்தினால் நாம் எல்லாரும் கிருபையின்மேல் கிருபை பெற்றோம்.**

**யோவான் 1:16.**

சீரியாவின் எல்லா மருத்துவர்களையும் பார்த்தும் நாகமானுக்குச் சுகமாகவில்லை. நம்பிக்கையிழந்திருந்த நாகமான், அந்தச் சிறுபெண்ணின் வார்த்தையை நம்பி இஸ்ரவேல் தேசத்துக்குப் போனான்.

ஏராளமான படைவீரர்கள் சூழ, எலிசாவுக்குக் காணிக்கையாக நிறைய வெள்ளி, பொன், இன்னும் நிறைய விலையுயர்ந்த பொருட்களையும் எடுத்துக்கொண்டு வந்தான்.

எலிசா தீர்க்கதரிசி நாகமானுக்கு எந்த ஒரு மருந்தையும் கொடுக்கவில்லை; எந்த ஒரு மந்திரத்தையும் உச்சரிக்கவில்லை. நாகமானைப் பார்க்கவுமில்லை; ‘யோர்தான் நதியில் நாகமான் ஏழுமுறை மூழ்கி எழவேண்டும்’ என்று தன் வேலையாள் கேயாசியிடம் சொல்லி அனுப்பினார். அதைக் கேட்டு நாகமானுக்குக் கோபம் அதிகமாக வந்தது.



‘எலிசா தன்னைப் பார்த்து, நல்ல ஆறுதலான, நம்பிக்கையான வார்த்தைகளைப் பேசுவார்; தன்னைத்தொட்டு ஏதேனும் மருந்து தடவுவார்; அல்லது இஸ்ரவேலின் தேவனிடம் தனக்காக வேண்டிக்கொள்வார்’ என்றெல்லாம் நாகமான் நம்பியிருந்தான். ஆனால், இவ்வாறெல்லாம் செய்யாமல் தன் வேலையாளிடம் சொல்லி அனுப்பியிருந்தார். அதுவும் அந்த அழுக்கு யோர்தானில் ஒருமுறைஅல்ல, ஏழு முறை முழுகச்சொல்லியது அவனுக்குக் கடுங்கோபத்தை எழுப்பியது. சீரியாவுக்குப் போகப் புறப்பட்டான்.

ஆனால், அவனது பணியாட்கள் அவனிடம், “ஐயா! நீங்கள் சுகமடைய உங்களை ஏதேனும் ஒரு கடினமான காரியத்தைச் செய்யச் சொல்லியிருந்தால் செய்திருப்பீர்களல்லவா?

## செய்தி

**தேவன் உலகிலுள்ள ஒவ்வொருவர் மேலும் கிருபையாய் இருக்கிறார்.**

யோர்தானில் ஏழுமுறை மூழ்க வேண்டும்; அவ்வளவுதானே! இதற்கு ஏன் மறுக்கிறீர்கள்?'' என்று நாகமானிடம் நயமாகப் பேசினார்கள்.

யோர்தானில் இறங்கி, ஏழாம் முறை மூழ்கி எழுந்தவன் தண்ணீரிலேயே துள்ளினான். தொழுநோய் முற்றிலும் மாறி அழகிய மென்மையான சரீரத்தைப் பெற்றிருந்தான்.

அவனது உடலிலும் உள்ளத்திலும் மாறுதல் ஏற்பட்டது. தேவனைத் தன் மெய்யான தெய்வமாக ஏற்று போற்றினான்.

தேவனுடைய கிருபையும் அந்தச் சிறுமியின் உள்ளத்திலிருந்த தேவனுடைய அன்பும் நாகமான் தேவனை அறிந்து கொள்ளவும் சுகம் பெறவும் உதவியது. நீ! தேவனுக்காக என்ன செய்யப்போகிறாய்?

**செய்முறை:** யோர்தான் ஆற்றிலே ஏழுமுறை மூழ்கி எழும்புவதற்கு நாகமானுக்கு அதிக அளவு விசுவாசம் தேவையாயிருந்தது. இருப்பினும் நாகமான் தேவன் சொன்ன படியே ஆற்றில் மூழ்கி எழுந்தபின்னர் தேவனைப் பற்றிய மேலான ஒரு செய்தியை அறிந்துகொண்டார். அச்செய்தி, கீழே ஒழுங்கற்று வார்த்தைகள் மாறிக் கிடக்கின்றன. அதை ஒழுங்காக்கி கீழே உள்ள கோட்டில் எழுது.

**புதிர் 6**

*தேவன் உலகிலுள்ள தம் ஒவ்வொருவரும் பெற கிருபையின் விரும்புகிறார் ஈவுகளை.*

_______________

_______________

_______________

_______________

_______________